**தமிழாக்கம்**

**தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை–6.**
**முன்னிலை: முனைவர் ச. கண்ணப்பன்**

**ந.க.எண். 11583/எம்/இ1/2021 நாள். 26.02.2021**

பொருள் பள்ளிக்கல்வி – "பரிட்சைக்கு பயமேன் 2021' – தேர்வு பற்றிய கலந்துரையாடல் – பாரதப் பிரதமருடன் இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்ள மத்திய அரசால் மாணவர்களுக்கு கட்டுரைப்போட்டி நடத்துதல் – பங்குபெற்ற மாணவர்களின் கட்டுரைகளை மாவட்ட மற்றும் மாநில அளவில் தேர்வுக்குழு அமைத்து நிகழ்ச்சியில் கலந்து கொள்ள உள்ள மாணவர்களைத் தெரிவு செய்தல் – சார்பு.

பார்வை
1. Secretary, Department of School Education & Literacy Ministry of Education, Government of India, Government D.O.6-2/2021-Desk(MDM)-part(1) Dated.17.02.2021
2. இவ்வியக்கக இதே எண்ணிட்ட செயல்முறைகள், நாள் 25.02.2021.

**********

பார்வையில் கண்ட மைய அரசின் கடிதத்திற்கிணங்க, மாண்புமிகு பாரதப்பிரதமர் அவர்களோடு மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகியோர் நேரடியாக உரையாடக்கூடிய **"பரிட்சைக்கு பயமேன் 2021'** நிகழ்வு 4 ஆம் முறையாக 2021 மார்ச் மாதம் 3 ஆம் வாரம், கோவிட்–19ற்கான வழிகாட்டு நெறிமுறைகளையொட்டி இணைய வழியில் நடைபெற உள்ளது. இந்நிகழ்வானது மத்திய கல்வி அமைச்சகத்தின் பள்ளிக் கல்வி மற்றும் எழுத்தறிவு துறையால் கடந்த மூன்று ஆண்டுகளாக வெற்றிகரமாக நடத்தப்பட்டு வருகிறது.

இந்நிகழ்வில் 2000 தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் நேரடியாக கலந்து கொள்கின்றனர். இணைய வழியில் கலந்து கொள்ளும் இந்த 2000 மாணவர்களைத் தேர்வு செய்ய பிப்ரவரி 18 ஆம் தேதி முதல் 2021 மார்ச் 14 ஆம் தேதி வரை 9 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொள்ளும் வகையில் **https://innovateindia.mygov.in/ppe2021/** என்ற இணையதளத்தில் பல்வேறு தலைப்புகளில் (தலைப்புகள் இணைக்கப்பட்டுள்ளது) போட்டிகள் நடைபெற உள்ளன. பங்கேற்பாளர்கள் அனைவருக்கும் NCERT இயக்குநர் அவர்களால் கையொப்பமிட்ட சான்றிதழ்கள் வழங்கப்படும் . மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களிடம் நேரடியாகக் கேட்கக் கூடிய வகையில் தரமான கேள்விகளை உருவாக்கும்

வகையில் போட்டிகள் நடத்தப்பட உள்ளது. அதிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் கேள்விகள் நிகழ்ச்சியில் சேர்க்கப்படலாம் . பொதுவாக 20லிருந்து 30 குழந்தைகள் வரை கேட்கும் கேள்விகளுக்கு மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களால் பதிலளிக்கப்படும் வகையில் பட்டியலிடப்படும் . முந்தைய பரிட்சைக்கு பயம் ஏன் நிகழ்வுகளில் கேள்விகள் கேட்ட குழந்தைகள் ஊடகங்களால் அழைக்கப்பட்டு அவர்களின் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வாய்ப்பளிக்கப்பட்டனர். அதே போன்று இந்த ஆண்டும் சில மாணவர்கள் ஊடக நிகழ்வுகளில் பங்கேற்கக் கூடிய வாய்ப்பினைப் பெறுவர்.

கீழ்கண்ட வகைகளில் இந்நிகழ்வினை காட்சிப் படுத்த வேண்டுமாய் அனைத்து முதன்மை கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். (விரைவில் படைப்புகளைப் பற்றிய விபரங்கள் பகிரப்படும்)

- அலுவலக இணையதளம் மற்றும் தொடர்புடைய அலுவலகங்கள் மற்றும் துறைகள் மூலமாக
- பல்வேறு நிலைகளில் உள்ள துணை நிலை அலுவலகங்களில் உள்ள முக்கிய இடங்களில்
- மாவட்டங்களில் செயல்படக் கூடிய பல்வேறு நிறுவனங்கள் மற்றும் அனைத்து வகை பள்ளிகளிலும் முக்கிய இடங்களில்
- ஆசிரியர்களால் நடத்தப்படும் இணைய வழி வகுப்புகளில்
- மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களால் மாணவர்களின் மன அழுத்தத்தை குறைக்க கூடிய வகையில் நடத்தப்படும் இம்முக்கிய நிகழ்வினை பல்வேறு புதுமையான வழிகளில் விளம்பரப் படுத்தலாம்.

அனைத்து முதன்மை கல்வி அலுவலர்களும் இ–மெயில் மற்றும் சமூக ஊடகம் மூலமாக அனைத்து வகையான படைப்புகள் மற்றும் வழிமுறைகளையும் பள்ளிகளுக்கும் கல்வி நிருவாக அலுவலர்களுக்கும் உங்கள் அலுவலகம் மூலமாகவும் பெற்றோர்கள் மற்றும் மாணவர்களுக்கு பள்ளிகள் மூலமாகவும் அனுப்பப்பட்டு விட்டதை உறுதி செய்து கொள்ளவும்.

அனைத்து வகை பள்ளிகள் அதாவது அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் மற்றைய நிறுவனங்களால் நிர்வகிக்கப்படும் கல்வி நிலையங்களை (CBSC,ICSE, காம்பிரிட்ஜ்...) சார்ந்த மாணவர்களும் பிப்ரவரி 18 முதல் மார்ச் 14 வரை **https://innovateindia.mygov.in/ppc-2021/** இணையதளத்தில் நடத்தப்படும் படைப்பாக்க எழுத்து திறன் போட்டிகளில் கலந்து கொண்டு இந்நிகழ்வினில் கலந்து கொள்ளக்கூடிய வாய்ப்பினை உருவாக்கி கொள்வதை உறுதிப்படுத்தி கொள்ளுங்கள்.

இந்த வகையில் பரவலாக விளம்பரப்படுத்தும் வகையிலும்,பங்கு கொள்ளும் வகையிலும் உங்கள் தனிப்பட்ட ஊடக திட்டத்தினை உருவாக்கி அதனை எங்களோடு பகிர்ந்து கொள்ளுங்கள்.

கீழ்கண்ட ஹேஷ் டேக்கினை பயன்படுத்தி இந்நிகழ்வினை விளம்பரப்படுத்துங்கள்.

**#ExamWarriors and #PPC2021.**

பள்ளிகள் தங்களுடைய சமூக ஊடகங்கள் மூலமாகவும் Exam Warriors மற்றும் PPC 2021 நிகழ்வினை விளம்பரப்படுத்தவும் கேட்டுகொள்ளப்படுகிறார்கள். பள்ளிகள் தங்களுடைய தனிப்பட்ட சுவரொட்டிகள், படைப்பு திறன் மற்றும் வீடியோ படங்களை உருவாக்கவும் அவற்றை பதிவேற்றம் செய்யவும் கேட்டுகொள்ளப்படுகிறார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்புகளும் வீடியோ (காணொலி) காட்சிகள் My gov தளத்திலும் பதிவேற்றம் செய்யப்படலாம்.

தங்கள் மாவட்டத்தில் உள்ள அனைத்து வகை பள்ளிகளுடனும் கூட்டத்தினை ஏற்பாடு செய்து அதிக அளவிலான மாணவர் பங்கேற்பை உறுதி செய்ய வேண்டும். "பரிட்சைக்கு பயமேன் 2021' நிகழ்வில் நேரிடையாக பங்குபெறும் குழந்தைகளுக்கு சிறப்பு பரிசும் கொடுக்கப்படவுள்ளது என்பதையும் அனைவருக்கும் தெரியப்படுத்துங்கள்.

தேர்வுத் திருவிழாவை கொண்டாட அனைவரும் கை கோர்ப்போம். நம்முடைய நாட்டின் எதிர்கால கட்டமைப்பாளர்களுக்கு "பரிட்சைக்கு பயமேன் 2021' நிகழ்வானது கற்றலை மகிழ்வானதாக மாற்ற உள்ளது.

இணைப்பு: போட்டிக்கான தலைப்புகள்

ஒம்/- ச. கண்ணப்பன்
பள்ளிக் கல்வி இயக்குநர்

பெறுநர்
அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்
அனைத்து மாவட்ட கல்வி அலுவலர்

நகல்: அரசு முதன்மைச் செயலாளர், பள்ளிக் கல்வித் துறை அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.

நகல்: மாநிலத் திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்டம், சென்னை-6 அவர்களுக்கு பணிவுடன் அனுப்பப்படுகிறது.

நகல் : இயக்குநர், மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் அவர்களுக்கு தொடர்நடவடிக்கைக்காக கனிவுடன் அனுப்பப்படுகிறது.

**Annexure- I**

## Topics for creative writing competition on MyGov.in

- **For Students**

**Topic 1:** Exams are like festivals, celebrate them: Activity: Draw a scene depicting a festival around your favorite subject. (Upload your painting in .jpeg or .pdf format. Maximum file size allowed is 4 MB)

**Topic 2:** India Is Incredible, Travel and Explore
Activity: Imagine your friend visits your city for three days. What memories would you create for him or her in each of the following categories:

- Places to See.
- Food to Relish.
- Experiences to remember.

**Topic 3:** As One Journey Ends, Another Begins: Activity: Describe the most memorable experiences of your school life.

**Topic 4:** Aspire, Not to Be, but to Do

Activity: If there was no restriction on resources or opportunities, what would you do for society and why? Submit a write up

**Topic 5:** Be Grateful

Activity: Write 'Gratitude Cards' for those whom you are grateful to.

- **For Teachers:**

**Topic:** Online Education System – Its benefits and how it can be improved further.

- **For Parents:**

**Topic 1:** Your Words Make Your Child's World - Encourage, As You Have Always Done
Activity: Write a story about the vision you share with your child for his or her future. Let your child write the first sentence. Then you write the next and so on.

**Topic 2:** Be Your Child's Friend—Keep Depression Away

Activity: Write a postcard to your child and let him or her know why they are special.